**செ.வெ.எண்: 08** **நாள்: 02.02.2017**

# பத்திரிகைச் செய்தி

## 108 ஆம்புலன்ஸ் டிரைவர் மருத்துவ உதவியாளர் பணிக்கு நேர்முக தேர்வு புதுக்கோட்டையில் நடக்க இருக்கிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 108 ஆம்புலன்ஸ் டிரைவர்-மருத்துவ உதவியாளர் பணிக்கு நேர்முக தேர்வு முகாம் 06.02.2017 (திங்கள் கிழமை) புதுக்கோட்டையில் நடைபெற உள்ளது.

**ஆம்புலன்ஸ் டிரைவர்:**

108 ஆம்புலன்ஸ் டிரைவர்கள் மற்றும் அவசர கால உதவியாளர் பணி இடங்களுக்கான நேர்முகத்தேர்வு 06.02.2017 (திங்கள் கிழமை) காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரி பழைய கலையரங்கத்தில் நடைபெற உள்ளது. இதில் தேர்வு பெற்றவர்கள் தமிழகத்தில் எந்தப் பகுதியிலும் பணி நியமனம் செய்யப்படுவார்கள் 12மணி நேரம் இரவு பகல் என சுழற்சி முறையில் பணியாற்ற வேண்டும்.

தேர்வு செய்யப்படுபவர்களுக்கு பணி நியமன ஆணை அன்றே வழங்கப்படும். ஓட்டுநருக்கான அடிப்படை தகுதிகள் பத்தாம் வகுப்பு தேர்ச்சி, இலகுரக வாகனம் ஓட்டுனர் உரிமம் மற்றும் பேட்ஜ் வாகன உரிமம் இருக்க வேண்டும் 24 வயதுக்கு மேலும் 35 வயதுக்கு மிகமாலும் இருக்க வேண்டும்.

ஆண்கள் 162.5 சென்டி மீட்டருக்கு குறையாமல் உயரம் இருக்க வேண்டும். ஓட்டுநர் உரிமம் எடுத்து குறைந்த பட்சம் 3 ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்க வேண்டும். தகுதிச் சான்றிதழ் ஓட்டுநர் உரிமம் மற்றும் அனைத்து அசல் சான்றிதழ்களும் கொண்டுவர வேண்டும்.

டிரைவர் பணிக்கு வருபவர்களுக்கு எழுத்துத் தேர்வு தொழில் நுட்ப தேர்வு மனித வளத்துறை நேர்கானல் கண்பார்வை சம்மந்தப்பட்ட தேர்வு மற்றும் சாலை விதிகளுக்கான தேர்வுகள் நடத்தப்படும்.

**மருத்துவ உதவியாளர்.**

மருத்துவ உதவியாளர் பணியிடத்திற்கு ஆண்கள்,பெண்கள் விண்ணப்பிக்கலாம் பி.எஸ்.சி. நர்சிங் விலங்கியல் தாவரவியல், மைக்ரோ பயாலஜி அல்லது ஜி.என்.எம் படித்திருக்க வேண்டும் அல்லது ஏ.என்.எம். அல்லது டி.என்.ஏ, டி.எம்.எல்.டி 2 ஆண்டுகள் படித்திருக்க வேண்டும் அல்லது டி.பார்ம் 3 ஆண்டுகள் படித்திருக்க வேண்டும் 19 வயது முதல் 30 வயதிற்குள் இருக்க வேண்டும்.

மருத்துவ உதவி பயிற்சியாளர்களுக்கு இ.எம்.டி டெக்னீசியன் மற்றும் டெக்னீசியன் பயிற்சிக்குமான தகுதிகள் ஓராண்டு சான்றிதழ் படிப்பை அரசு மருத்துவக் கல்லூரியில் படித்திருக்க வேண்டும் 19 வயது முதல் 30 வயதிற்குள் இருக்க வேண்டும் இவர்களுக்கு எழுத்து தேர்வு மருத்துவ நேர்முகம் உடற்கூறியல், முதலுதவி பணி தொடர்பாகவும் மற்றும் மனிதவள துறையின் நேர்முக தேர்வுகளும் நடத்தப்படும் இதில் தேர்வு செய்யப்படுபவர்களுக்கு 50 நாட்கள் வகுப்பறை பயிற்சி மருத்துவமனை ஆம்புலன்ஸ் சார்ந்த நடைமுறை பயிற்சிகள் அளிக்கப்படும் தகுதியும் விருப்பமும் உடையவர்கள் கலந்து கொள்ளலாம்.
ஊதியம்: ஓட்டுனர் 11100, மருத்துவ உதவியாளர் 11600. தொலைபேசி எண்கள்: 7397724713, 7397724844, 7397444156.

மேற்காணும் தகவலை என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**